அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 273/2022

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 17 –ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பி.சா.1 | 17.11.2025 |
| பெயர் சுரேஷ் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை</u>:–

1. நான் தாக்கல் செய்த எதிர் உரை மற்றும் பிரமாணவாக்குமூலத்தின் விவரங்கள் எனக்கு தெரியும். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. வாதியின் சொத்திற்கும் எனது சொத்திற்கும் இடையே 10 அடி துாரம் உள்ளது. எனது சொத்து சம்மந்தமான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் 4மால் எல்லை என்னவென்றால் மேற்கில் என்னுடைய நிலம், வடக்கில் முனுசாமி நிலம், தெற்கில் சர்ச், கிழக்கில் கோபால் நிலம் உள்ளது. எதிர்உரையில் வாதி மற்றும் அவரது அண்ணன் ஸ்ரீநிவாசனுக்கு அவர்களது அம்மா வழக்கு சொத்து சம்மந்தமாக உயில் எழுதிவைத்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

அவ்வாறு கொடுக்கப்பட்டதில் முன் பக்க சொத்து ஸ்ரீநிவாசனுக்கும் பின்பக்க சொத்து வாதிக்கும் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. வாதிக்கு பின்னால் இடம் கொடுக்கப்பட்டதால் அவர் முன்னால் வருவதற்காக 10 அடி நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு மேற்கு பக்கம் சிமெண்ட் பீம் உள்ளது என்றால் சரிதான். அந்த பீம் சுமார் 10 வருடங்களுக்க முன்பு போடப்பட்டது என்றால் சரியல்ல. 3 வருடத்திற்கு முன்பு போடப்பட்டது. அந்த பீம் வாதி தான் போட்டார் என்றால் சரிதான். வாதிக்கு உயில் மூலம் கிடைத்த சொத்திற்கு அவர் மேற்குபக்கம் சுவர் கட்டுவதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் உள்ளது. வாதியின் இடத்தில் வாதி பீம் ஏற்றி சுவர் கட்டுவதை ஆட்சேபனை செய்வதற்கு என்னிடம் என்ன ஆவணங்கள் உள்ளது என்றால் இன்னும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை.

3. வாதியின் சொத்திற்கு மேற்கு பக்கம் எனக்கு உரிமை உள்ளது என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். எனது பதில்உரையில் 10 அடி நிலம் வாதிக்கு ஒதுக்கப்பட்டது என்று பேரா 3 ல் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 10 அடி நிலம் இல்லாமல் மேலும் 2 அடி நிலத்தை வாதி ஆக்கிரமித்து உள்ளார் என்பதை காட்டுவதற்கும் எனக்கு அந்த 2 அடி நிலத்தில் உரிமை உள்ளது என்பதை காட்டுவதற்கும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2 அடி நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்யும் விதத்தில் வாதி எந்த சுவரும் கட்டவில்லை என்றால் சரிதான்.

4. வாதிக்கு ஒதுக்கப்பட்ட 10 அடி நிலம் இல்லாமல் 2 அடி நிலத்தை வாதி ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. அது பொதுபாதை ஆகும். சுமார் 40 வருடங்களாக அந்த 10 அடி பாதையில் தான் சென்று

வருகிறோம். எனது பிரமாணவாக்குமூலத்தில் பாகபிரிவினை சம்மந்தமாக சொல்லியுள்ளேன் என்றாலும் அந்த பாகபிரிவினை ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதியுடைய சொத்தில் எவ்வாறு எனக்கு பாகம் உள்ளது என்றால் வாதியின் அப்பாவும் எனது தாத்தாவும் உடன் பிறந்தவர்கள் அவர்கள் காலத்தில் அந்த பாதை சம்மந்தமாக ஊர்முன்னிலையில் எழுதிகொடுத்தார்கள். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை . வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. நானே பதில்உரையில் வாதிக்கு 10 அடி நிலம் உள்ளது என்பதை ஒப்புக்கொண்டுள்ளதால் அதில் வாதி சுவர் கட்டுவதற்கு நான் இடையூறு செய்யக்கூடாது என்றால் சரியல்ல. அது பொது இடம் ஆகும். வாதிகோரிய பரிகாரம் கிடைக்கவேண்டும் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.